முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

நாள். 19.11.2025.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**

**அசல் வழக்கு எண். 1/2025**

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நடராஜன் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | முனுசாமி | வயது | : | 62 |
| ஊர் | : | செய்யாறு | தொழில் | : | விவசாயம் |

**வா.சா. 1 (நடராஜன்): குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதியாகிய ஆறுமுகம் தாக்கல் செய்த 1994 வழக்கிற்கும் எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்கு சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வழக்கு சொத்திற்கு சம்மந்தமான ஆவணங்கள்தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நாங்கள் இந்த வழக்கு சம்மந்தமாக சட்ட அறிவிப்பு ஏதேனும் அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. பிரதிவாதிகள் ஏதேனும் எங்களுக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வட்டாட்சியர், கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் ஆகியோருக்கு வழக்கு சொத்து பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் எனவும் அவர்கள் பெயரில் தவறாக பட்டா உள்ளது எனவும் ஆட்சேபணை மனு ஏதேனும் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் தாசில்தாரிடம் மனு கொடுக்கப்பட்டுள்ளது.

2. மேற்படி மனுவானது எப்போது கொடுக்கப்பட்டது என்றால் 2024ம் வருடத்தில் கொடுக்கப்பட்டது. மேற்படி மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டதா என்றால் இல்லை விசாரணை நடைபெற்றது. தாசில்தார் மாறிவிட்டதால் நிலுவையில் உள்ளது. மேற்படி மனு கொடுக்கப்பட்டதற்கான ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தாசில்தாரிடம் கொடுக்கப்பட்ட மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டதால்தான் ஆவணம் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1 ஏக்கர் சொத்தில் எவ்வளவு முள்மரங்கள் விளைந்திருக்கும் என்றால் சுமார் 2000 மரங்கள் கூட விளைந்திருக்கும். மேற்படி சொத்தில் என்ன பயிர் செய்கிறார்கள் என்ற விவரங்களை அடங்கலில் பதிவு செய்வார்கள் என்று சொன்னால் சரிதான்.

3. ஒரு சொத்தானது யார் அனுபவிக்கிறார்களோ அவர்கள் பெயரில்தான் அடங்கல் கொடுக்கப்படும் என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தானது முள் மரங்கள் ஏதேனும் இல்லாமல் பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. 20 வருடங்களாக முள் மரம்தான் உள்ளது. நான் என் பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு சொத்தில்

55 டன் முள்வேலி மரங்களை வெட்டி எடுத்து ஜே.சி.பி உதவியுடன் பிரதிவாதி விற்பனை செய்ய முயன்றார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அவர் மரங்களை வெட்டி எடுத்தது உண்மைதான். 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தை அவர் கிரயம் பெற்று அவருக்கு உரிமையானது என்பதன் அடிப்படையில் ஆவணம் ஏற்படுத்த அவருக்கு முழு உரிமை உள்ளது என்று சொன்னால் மேற்படி வழக்கு சொத்தானது தனிப்பட்ட சொத்து இல்லை எங்களுக்கும் அதில் உரிமை உண்டு நாங்களும் வழக்கு சொத்தை வாங்கினோம்.

4. மேற்படி பிரதிவாதி எங்களுக்கும் முன்னால் கிரயம் பெற்றதால் நாங்கள் பிரச்சனை செய்யவேண்டும் என்ற எண்ணத்திற்காகவே மேற்படி சொத்தினை நாங்கள் கிரயம் பெற்றோம் என்று சொன்னால் அவர் அந்த சொத்தில் பிரச்சனை செய்ததால்தான் நாங்கள் ஊர் மக்கள் அனைவரும் சேர்ந்து கிரயம் பெற்றோம். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 13 முதல் 21 வரை கூறியுள்ள அனைத்தும் பொய் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற ஆவணமானது செல்லாது என்று சொல்ல எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தை பிரதிவாதி அனுபவிப்பதை நாங்கள் சட்ட விரோதமாக தடை செய்ய முயற்சிப்பது தவறு என்று சொன்னால் அதற்காகத்தான் நாங்கள் நீதிமன்றத்திற்கு வந்துள்ளோம்.

5. நாங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னாலும் அதனால் இந்த வழக்கினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இத்துடன் முடிவடைகிறது.**

**மறுவிசாரணை**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2025.11.19 17:32:43 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு